1979 ஏப்ரல் 2!

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். 'மைக்ரோடூல்ஸ்' நிறுவனம் தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை, அந்தத் தொகைகளைத் திருப்பிப் பெற உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருக்கிறார்கள். இப்பொழுது நிறுவனம் கலைக்கப்பட்டு Official Liquidator நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுதான் இப்பொழுதிருக்கிற நிலை. இப்பொழுதிருக்கிற நிலைமையைச் சொல்கிறேன், அவ்வளவுதான்.

பழனி வட்டத்தில் கூட்டுறவு கடன் வசூல்

*வினா எண். 603—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனித் தாலூகாவில், கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலை மிகவும் கெடுபிடி செய்து ஜப்தி செய்வது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுத்து நிறுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, (அ) பழனி தாலூகாவில், கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலை மிகவும் கெடுபிடி செய்து ஜப்தி செய்வது பற்றி புகார்கள் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை,

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி 8, 9 மாதங்களுக்கு முன்னால் போட்ட கேள்வி, ஆனால், வசூலில் கெடுபிடி உண்டு என்று புகார் ஏதும் வரவில்லையென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நான் புகாரைப்பற்றிக் கேட்கவில்லை. ஜப்தி நடவடிக்கைகள் அந்தப் பகுதியிலே உண்மையிலே நடந்தது. ஆகவே, அதைப் பற்றித்தான் கேட்டிருந்தேன். ஆகவே, இன்றையதினம் அந்த விவசாயிகளுடைய கடன் வசூலுக்காக 15 நாளைக்கு ஒருமுறை ரிஜிஸ்தர் நோட்டீஸ் அனுப்புகிறார்கள். ரிஜிஸ்தர் நோட்டீஸ் அனுப்ப ரூ. 4, ரூ. 4.50 செலவு என்று அந்த விவசாயிகள்மீது சுமத்தப்படுகிறது. ஆகவே, அவைகள் கொஞ்சம் நிறுத்தி வைக்கப்பெற்று, கெடு கடந்த காலம் என்று சொல்லி இதற்கு ஓவர்டியூ வட்டி விதித்திருக்கிறார்கள். அந்த ஓவர்டியூ வட்டியையாவது ரத்து செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 16-12-1978-ஆம் தேதியிலிருந்து ஜப்தி நடவடிக்கையைத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோமே தவிர, நியாயமாக விரும்பிக் கேட்கிற விவசாயிகளிடமிருந்து பெறுகின்ற அந்த முறையை நிறுத்தி வைக்கவில்லை. அந்த முறையில் சட்டபூர்வமான நடவடிக்கையை இன்று கூட்டுறவு துறை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, பழனி தாலூகாவில் கூட்டுறவு சங்கங்களில் 1978-79-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குக் கொடுத்த மொத்தக் கடன் தொகை எவ்வளவு? அந்த ஆண்டிலே இதுகாறும் கடன் திரும்பப் பெறாமல் நிலுவையாக உள்ள தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 31—3—1979 வரை பழனி வட்டத்திலுள்ள 53 கிராமக் கூட்டுறவு சங்கங்களும் மதுரை மத்திய கூட்டுறவு வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 207.30 இலட்சம் ரூபாய். இதில், தவணை கடந்த பாக்கி 173.15 இலட்சம் ரூபாய். அப்படி பார்க்கின்ற பொழுது 85% தவணை கடந்த பாக்கியாக பழனி தாலூகாவில் மட்டும் மதுரை மத்திய கூட்டுறவு வங்கிக்கு இன்றையதினம் நிலுவை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இந்தத் தவணை கடந்த பாக்கிகளைக்கூட கடந்த 3½ மாதமாக 16-12-1978 வதுநாளிலேயிருந்து ஜப்தி நடவடிக்கையோ, கெடுபிடி நடவடிக்கையோ பழனி தாலூகாவில் நிச்சயமாக எடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, கெடுபிடி வசூல் இல்லையென்று சொன்னதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த ஓவர்டியூ வட்டி என்பது இன்றையதினம் சுந்து வட்டியைக் கூட தாண்டிவிட்டது. ஆகவே, கெடு கடந்த காலத்திற்கென்று விதிக்கக்கூடிய அதிக வட்டியை ரத்து செய்ய அரசு ஏதாவது யோசித்துள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவு மானியத்தின் பொழுது இந்த மன்றத்திலே அரசு உறுதியளித்திருக்கிறது. இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற விவசாய உயர் மட்டக் குழு, இதனையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்த பிறகு நிச்சயமாக இந்தத் தண்ட வரிப் பிரச்னை பற்றியும் மிகுந்த ஆழ்ந்த கவனத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேமிப்பு அறையுடன் கூடிய கிராமக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள்.

* வினா எண். 604— திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள, கிராம கூட்டுறவு சங்கங்களில் எத்தனை சங்கங்களுக்கு சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது?

(ஆ) ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மேற்படி வசதி செய்து தர எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம கூட்டுறவு சங்கங்களில் 415 சங்கங்களுக்குச் சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது.

(ஆ) ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேற்படி வசதி செய்து தர தற்போது இயலவில்லை என்றாலும் வேறு மாற்று வசதி செய்து தரப்படுகிறது.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் நிறைய கூட்டுறவு சங்கங்கள் அந்தச் சங்கத்தின் தலைவரின் இல்லங்களில், சொந்தமாக கட்டிடங்களில் வைத்து நடத்துகிறார்கள். ஆகவே, பொதுமக்கள் அங்கே போக அஞ்சப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு சங்கத்திற்கு என்று தனிக் கட்டிடம் கட்டி, அங்கே இயங்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, அருள்கூர்ந்து உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, கிராமப்புற கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடம் இல்லாத குறை நிறைய இருக்கிறது. அதைத்தான் திரு. சின்னசாமியும்